உத்தமம்
INFITT
உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்
International Forum for Information Technology in Tamil



| முனைவர் கு. கல்யாணசுந்தரம் | வா.மு.சே. கவிஅரசன் | தி.ந.ச.வெங்கடரங்கன் |
|---|---|---|
| சுவிட்சர்லாந்து | அமெரிக்கா | இந்தியா |
| **தலைவர்** | **இயக்குநர் - செயலர்** | **துணைத்தலைவர்** |


**ஊடகங்களுக்கான செய்திக் குறிப்பு**

**ஜெர்மனியில் தமிழ் இணைய மாநாடு 2009**

தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் குறித்த இன்றைய சாதனைகளையும், எதிர்காலச் சோதனைகள், சவால்களையும் தமிழ்க் கணினி வல்லுநர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் கூடி விவாதிக்கும் தமிழ் இணைய மாநாடு வரும் அக்டோபர் 23ம் தேதி முதல் 25ம் தேதி வரை ஜெர்மனியில் நடைபெற உள்ளது. தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்திற்கான பன்னாட்டு மன்றமான உத்தமம் (INFITT - International Forum for Information Technology in Tamil) அமைப்பும், ஜெர்மனியில் அமைந்துள்ள கோலென் பல்கலைக்கழகத்தின் இந்தியயியல் மற்றும் தமிழ் ஆய்வு மையமும் (Institute of Indology and Tamil Studies, University of Cologne) இணைந்து இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தில் உலகளாவி வளர்ந்து வரும் வளர்ச்சிகளைமேலும் வளர்க்கவும், இனி எதிர் கொள்ள வேண்டிய சவால்களையும் குறித்து விவாதிக்கவும், எதிர்காலத் தமிழ்க் கணினிச் சிக்கல்களுக்கான தீர்வுகளை நோக்கி முன்னேறவும் தமிழ்க் கணினிச் சிந்தனையாளர் களை ஒன்றிணைத்து, சிந்தனை அரங்குகள் அமைத்து பன்னாட்டளவில் தமிழ் இணைய மாநாடுகளை உத்தமம் அமைப்பு ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் குறித்து இணைய மாநாடுகளை உத்தமம் அமைப்பு தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதுவரை சென்னை (1999, 2003), சிங்கப்பூர் (1997, 2000, 2004), மலேசியா (2001), அமெரிக்கா (2002) ஆகிய நாடுகளில் தமிழ் இணைய மாநாடுகள் நடந்துள்ளன.இந்த ஆண்டு முதல் முறையாக ஐரோப்பாவில் தமிழ் இணைய மாநாடு நடைபெற உள்ளது. ஜெர்மனியில் உள்ள கோலென் பல்கலைக் கழகத்துடன் இணைந்து இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறன்றன. தமிழ் இணைய மாநாடு 2009ன் மையக் கருத்தாக "**கணி வழி காண்போம் தமிழ்**" அறிவிக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலுமிருந்து தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் பலர் பங்கேற்கவுள்ளார்கள். ஆழ்ந்த விவாதங்களுக்குப் போதுமான நேரம் கிடைக்க வழி செய்யும் வகையில் 100 பேராளர்கள் மட்டுமே மாநாட்டில் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாடு குறித்து சுவிட்சர்லாந்தில் வசிக்கும் உத்தமம் அமைப்பின் தலைவர் பேராசிரியர் முனைவர் கு.கல்யாணசுந்தரம், "தமிழ் இணைய மாநாடு இதுவரை தமிழர் அதிக அளவில் வாழும் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா இவற்றில் நடைபெற்றுள்ளன. இந்த ஆண்டு நான்கு லட்சத்திற்கும்மேல் தமிழர்கள் வசிக்கும் ஐரோப்பிய கண்டத்தில் உள்ள ஜெர்மனியில் நடக்கவுள்ளது. இங்கு உள்ள இளம் தமிழர்கள் கணினியை பெருமளவில் ஐரோப்பிய மொழிகளில் பயன்படுத்துகின்றனர். இந்த ஆண்டு இணைய மாநாட்டின் நோக்கின்படி (கணி வழி காண்போம் தமிழ்) இவர்கள் அனைவரும் தமிழில் கணினியை பயன்படுத்தவும் இணையம் வழித் தமிழ்க் கல்வி கற்கவும் வகை செய்வதே." என்று தெரிவித்தார்.

மாநாட்டில் அளிப்பதற்குரிய கட்டுரைகளை இந்த ஆண்டு செப்டம்பர் 15க்குள் (ti2009@infitt.org) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம். வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் மாநாட்டில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாநாட்டிற்கான இணையதள முகவரி :

http://www.infitt.org/ti2009

For more details please contact any of the below members


**India / Sri Lanka: M.Anto Peter**: Mobile: 98400 99881, antopeter@yahoo.com | **Maalan**: Mobile: 94443 85426, maalan@gmail.com | **T.N.C.Venkatarangan:** Mobile: 98840 85422, venkat@venkatarangan.com

**Singapore / Malaysia: S. Maniam:** Mobile: (65) 97805920, Email: smaniam@pacific.net.sg

**Europe : Dr. K. KalyanaSundaram:** Email: kalyan.geo@yahoo.com

**Americas : Va.Mu.Se. Kaviarasan:** Mobile: 1-614 668 0370, Email: kavi@infitt.org